**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 9/2018</u>**

நாள் – 08.04.2026

DW1 – வெங்கடாசலம்

த/பெ – அய்யாசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of April 2026.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு எதற்காக வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா தடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அந்த தாவா தடம் பி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தாவா தடமானது தற்போது புதிய உட்பிரிவுபடி சர்வே எண்.210/2, 3, 4 உட்பிரிவில் உள்ளது என்றால் சரிதான். அந்த தாவா தடமானது கடந்த 05.02.1996 ம் தேதியிட்ட பாகசாசனத்தின்படி எனக்கும், எனது அப்பா அய்யாசாமிக்கும், எனது சித்தப்பா சுப்பிரமணிக்கும் பொதுவாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது அந்த தாவா தடமானது எனக்கும், சுப்பிரமணியத்திடம் கிரையம் வாங்கிய கே.சி.மாரப்பனின் மகளான வாதிக்கும் பொதுவில் பாத்தியம் என்றால் சரிதான்.

2. தாவா பி அட்டவணை சொத்தான 13 சென்ட் தடத்திற்கு தென்புறம்தான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்திற்கு வடபுறம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா தடத்திற்கு தென்புறம் உள்ள சொத்துக்களில் ஒரு சில சொத்துக்களை என் அப்பா அய்யாசாமி இந்த வழக்கின் மற்ற

பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு எனது அப்பா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரங்களில் கிழமேல் தடத்திற்கு தெற்கு என்று எல்கை குறிப்பிட்டுதான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்துக்களை எனது அப்பா அய்யாசாமி எனக்கு 15.12.2012–ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு பின்பு 2017–ம் ஆண்டு வாக்கில் எனது சொத்துக்களை கம்பிவேலி அமைத்து கிழமேல் தடத்தை பார்த்தவாறு இரும்புகேட் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்துக்களை பார்க்கவேண்டியும், அளவீடு செய்ய வேண்டியும் நீதிமன்ற ஆணையர் வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வேயரை கொண்டு தாவா சொத்துக்களை அளவீடு செய்து அதுகுறித்த அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையுடன் இணைத்துள்ள மாதிரி வரைபடத்தில் கிழமேல் ரோட்டில் தென்புறமாக நான் அமைத்துள்ள கேட்டை குறிப்பிட்டு காட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த இரும்பு கேட்டானது 13 சென்ட் பரப்பில் உள்ள தாவா பி அட்டவணை தடத்தில் ஒரு பகுதியில் அமைத்துள்ளேன் என்றால் இல்லை. அந்த கிழமேல் தடத்தின் ஒருபகுதியை நான் 2017–ம் ஆண்டில் ஆக்கிரமித்துதான் இரும்புகேட் அமைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் என்னுடைய இரும்பு கேட்டிற்கு கிழபுரத்தில் உள்ளவர்களும் அந்த தடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது, வாதியும் அந்த தடத்திற்கு வடபுறத்தில் ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி போட்டுள்ளார். நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபணை எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு பகுதிகளை நானும், மற்ற பிரதிவாதிகளும் அகற்றி கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் மற்ற பிரதிவாதிகள் அவர்களுடைய மனை இடங்களில் 15 வருடங்களுக்கு முன்பாகவே கட்டிடம் கட்டியுள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபேராணை வழக்கை அரசாங்கத்திற்க்கு எதிராகத்தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த தாவா பி அட்டவணை சொத்தான பொதுப்பாதையை தனிப்பட்ட முறையில் யாருக்கும் விற்பனை செய்ய உரிமை கிடையாது என்றால் சரிதான். அதனால் வாதி தாவாவில் கோரியபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா பொதுப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை 2017–ம் ஆண்டில்தான் ஏற்படுத்தினார்கள் என்றும், அதனால் இந்த வழக்கிற்கு தெளிவான வழக்குமூலம் சொல்லிதான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.09 19:10:13 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**